அநுபந்தம்
(ஸ்ரீ மஹாபாரதம் சாந்தி பர்வம் 235-வது அத்யாயத்தின் சுருக்கம்)

லக்ஷ்மிக்கும இந்திரனுக்கும் ஸம்வாதம்

"ஒரு புருஷன் க்ஷேமத்தையடைவதற்கும், துன்பத்தைப் பெறுவதற்குமுள்ள முன் குறிகளை எனக்குச் சொல்லவேண்டும்" என்று யுதிஷ்டிரர் கேட்க, பீஷ்மர் சொல்லுகிறார்.-

மனிதன் க்ஷேமத்தையும் துன்பத்தையும் அடைவதற்குமுள்ள முன் குறிகளை அவன் மனமே சொல்லும். இவ்விஷயத்தில் இந்திரனுக்கும் லக்ஷ்மிக்கும் முன்பு நடந்த இதிஹாஸத்தைச் சொல்லுகிறேன், கேள்.

ஒரு சமயம் நாரதமஹர்ஷி ஸ்ரீமந்நாராயணன் திருவடியிலிருந்து பெருகின கங்கைக்கரைக்குச் சென்று, அங்கு நீராடி, ஜபம் செய்து கொண்டிருந்தார். இந்திரனும் அங்கு வந்து ஸ்நாநம் செய்து ஜபம் செய்து கொண்டிருந்தான்.. அவ்விருவர்களும் சூரியன் உதித்ததும் உபஸ்தானம் செய்தார்கள். பிறகு அவ்விருவரும் வேறு சூரியன் உதிப்பது போன்ற ஒரு ஜோதியைக் கண்டனர் . அந்த ஜோதி அவ்விருவரின் அருகில் வருவதாகவும் காணப்பட்டது. மூன்றுலகங்களையும் பிரகாசிக்கச் செய்கின்ற அந்தத் தேஜஸைக் கண்டு கைகூப்பி நிற்கும் அவ்விருவர்களும் சிறிது காலத்துக்குள் ஆச்சரியமான ஒரு திவ்ய விமானத்தைக் கண்டனர். அவ்விமானத்தில் தாமரைமலரில் வீற்றிருப்பவளான லக்ஷ்மிதேவியைப் பார்த்தனர். அந்த லக்ஷ்மியானவள் விமானத்திலிருந்து இறங்கி, இந்திரனையும் நாரதமுனிவரையும் நோக்கி வந்தாள். இந்திரன் நாரதமுனிவருடன் அந்த லக்ஷ்மியின் சமீபம் வந்து தன்னைத் தானே தெரிவித்து, அவளுக்கு ஒப்பற்ற பூஜையைச் செய்தான். தேவராஜன் லக்ஷ்மியை நோக்கி, " அழகிய புன்சிரிப்புள்ளவளே! நீ யார்? என்ன காரியத்திற்காக வந்தாய்? எங்கிருந்து வருகிறாய்? எங்கு செல்லுகிறாய்? " என்று கேட்க. லக்ஷ்மீதேவி சொல்லத் தொடங்கினாள்,- "மூன்று உலகங்களிலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்கள் நான் (லக்ஷ்மி) தங்களிடமிருக்க வேண்டுமென்று விருநம்பி மிகவும் முயலுகின்றன. அந்த நான் தாமரை மலரில் எல்லாப் பிராணிகளுடைய சம்பத்துக்காக அவதரித்தேன். நான் லக்ஷ்மீ. பூதி, ஸ்ரீ, ச்ரத்தை, மேதை, ஸந்நதி, விபூதி, ஸ்திதி, த்ருதி, (தைரியம்), ஸித்தி, ஸம்பூதி, ஸ்வாஹா, ஸ்வதா, நியதி, க்ருதி- என்ற உருவமுள்ளவளா யிருக்கிறேன். தர்மசீலர்களாய் ஜயசாலிகளான அரசர்களுடைய ஸேனையிலும் துவஜங்களிலும், தேசங்களிலும், நகரங்களிலும், வஸிக்கின்றேன். ஜயிக்கும் திறமையுள்ள சூரனாய்ப் போரில் புறங்காட்டாதவனான உத்தம மனிதனிடம் நான் எப்பொழுதும் வஸிப்பேன். தர்மமுள்ளவனும், ஸத்தியம் பேசுகிறவனும், பிராம்மணர்களுக்கு நன்மை செய்பவனும், அடக்கமுள்ளவனும், தானம் செய்யும் ஸ்வபாவமுள்ளவனுமான மனிதனிடத்தில் எப்பொழுதும் வஸிப்பேன். உண்மையான தர்மமிருந்த காரணத்தால் அஸுரர்களிடத்தில் முன்பு வஸித்தேன். அவர்கள் இப்போது விபரீதமாயிருப்பதை அறிந்து உன்னிடத்தில் வஸிக்க விருப்பம் கொண்டேன்." என்று சொன்னாள்.

"எவ்விதமான நடத்தையுள்ள அஸுரர்களிடம் நீ வஸித்தாய்; எதைக் கண்டபின் அவர்களை விட்டு இங்கு வந்தாய்" என்று இந்திரன் கேட்க, லக்ஷ்மி தேவி சொல்லத் தொடங்கினாள்.

தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை செய்கினறவர்களும், தைரியத்தை விட்டு விலகாதவர்களும், ஸ்வர்க்கத்திற்கு உரிய வழியில் செல்லுகிறவர்களுமான பிராமணர்களிடத்தில் நான் பற்றுள்ளவள். அந்த அஸுரர்களுக்குத் தானம், வேதமோதுதல், பாகம், பகவதாராதனம், பித்ருக்கள், தேவதைகள், அதிதிகள், குருக்கள் இவர்களின் பூஜனம் முன்பு இருந்தன, சுத்தமான வீடுடையவர்களும், மாதர்களை ஜயித்தவர்களும், அக்னியில் ஹோமம் செய்கிறவர்களும், குருசுச்ரூஷை செய்பவர்களும், அடக்கமுள்ளவர்களும், பிராம்மணர்களுக்கு நன்மை செய்பவர்களும், ஸத்யம் பேசுபவர்களுமாக இருந்தார்கள். அவர்களுடம் சிரத்தை, கோபமின்மை, தானம், அஸூயையில்லமை- இவையெல்லாமிருந்தன. மக்களையும் மனைவியையும் சிற்றத்தாரையும் காப்பாற்றினார்கள். பொறாமையற்றவராயிருந்தனர். ஒருவருக்கொருவர் பொறாமையினால் பிறரை அடக்கியாள விரும்பவில்லை. பிறரின் ஸம்பத்தைக்கண்டு ஒரு போதும் தாபப்படுகிறதில்லை. கொடுப்பார்கள், சேர்ப்பார்கள், பிறரின் துக்கத்தை அறிவார்கள், உறுதியான பக்தியுள்ளவர்கள். இந்திரிய ஜயம் பெற்றவர்கள். வேலைக்காரர்கள், மந்திரிகள் இவர்களை ஸந்தோஷப்படுத்துவார்கள். நன்றியறிவுள்ளவர்கள். பிரியமாய்ப் பேசுவார்கள், யோக்கியதைக்குத் தக்கவாறு வெகுமதி அளிப்பார்கள். வெட்கத்துடன் நடப்பார்கள். பர்வ காலங்களில் எப்போதும் நன்கு ஸ்நாநம் செய்வார்கள். பர்வ காலங்களில் எப்போதும் நன்கு ஸ்நாநம் செய்வார்கள். சந்தனம் முதலியவைகளைப் பூசிக்கொண்டு நன்கு அலங்கரித்துக் கொள்வார்கள். உபவாஸம், தவம் இவைகளைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவர்கள்,

நம்பத்தக்கவர்கள். வேதமோதுவார்கள், ஸூரியன் உதிக்கும்போது தூங்கினவர்களல்லர். இரவில் தயிர், சத்துமா இவைகளைப் புஜியார்கள். காலையில் நெய் முதலிய மங்கள த்ரவ்யங்களைப் பார்ப்பார்கள். சுத்தராய் வேதமோதுவார்கள், பிராம்மணர்களைப் பூஜிப்பார்கள், தர்மத்தை விட்டு விலகாமல் தானம் செய்து, தாங்கள் தானம் வாங்காதவர்களாகவும், பகலில் தூங்காமல் இரவில் பாதி தூங்குகிறவர்களாகவுமிருந்தார்கள். ஏழை, கதியற்றவர்கள், முதியோர், துர்பலர், நோயாளி, பெண்கள்- இவர்களிடத்தில் இரக்கமுற்று எப்போதும் அவர்களுக்கு வேண்டியதை அளித்து வந்தார்கள். இவர்களின் காலம் இவ்விதம் கழிந்தது. பயந்தவன், துன்பமுள்ளவன், பயத்தால் கஷ்டப்படுபவன், நோயாளி, பொருளைப் பறிகொடுத்தவன், வ்யஸநமுள்ளவன் - இப்படிப்பட்டவர்களையெல்லாம் அவர்கள் எப்பொழுதும் தேற்றி வந்தனர். தர்மத்தைத் தொடர்ந்து நடத்தினர். ஒருவரையொருவர் துன்பப்படுத்துவதில்லை. குருக்களையும், முதியோர்களையும் ஸேவித்து வந்தனர். அதிதிகளுக்கு அந்நமிட்டு மிச்சத்தை உண்பார்கள். இனிய அன்னத்தை ஒருவனாக உண்பதில்லை. பரஸ்திரீகளிடம் செல்லுகிறதில்லை. தம்மிடத்தில் போல் எல்லாப் பிராணிகளிடத்திலும் தயையுடனிருந்தார்கள். ஆகாசத்திலும், பசுக்களிடத்திலும், பர்வகாலங்களிலும், தகுதியற்றவிடத்திலும் சுக்லத்தை விட அவர்கள் விரும்பினதில்லை. தானம், ஸாமர்த்தியம், நேர்மை, உத்ஸாஹம், அஹங்காரமில்லாமை, மிக்கநேசம். பொறுமை, சுத்தி, தயை, தவம், ஸ்நேஹிதர்களிடத்தில் கெட்ட எண்ணமில்லாமை- இவை யாவும் அவர்களிடமிருந்தன. துக்கம், சோம்பல், ஸந்தோஷமில்லாமை, அஸூயை, அஜாக்கிரதை, உத்ஸாஹமில்லாமை, வருத்தம், ஆசை - இவைகள் அவர்களிடமிருந்ததில்லை. இவ்வித குணஙளுள்ள அஸுரர்களிடம் பிரஜா ஸ்ருஷ்டி காலம் முதல் அவர்களுக்குக் கெட்ட குணங்கள் வரும் வரையில் நான் வஸித்துக் கொண்டிருந்தேன்.

பிறகு காலக்கொடுமையினாலும், குணக்கேட்டாலும், அஸுரர்கள் காமக்குரோதங்களுக்கு வசப்பட்டவர்களானார்கள். தர்மத்தையிழந்தார்கள். நல்ல கதைகளைச் சொல்லுகின்ற ஸாதுக்களான பெரியோர்களைப் பரிஹஸித்தார்கள்; அவர்களிடம் அஸூயைப் பட்டனர். பெரியோர் வரும்பொழுது சிறுவர்கள் எழுந்திருந்து பூஜிக்காமல் உட்கார்ந்திருந்தார்கள். தகப்பனிருக்கையிலேயே மகன் ஆளத்தொடங்கிவிட்டான். சத்துருவுக்கு அடிமைப்பட்டும் வெட்கமில்லாமல் தாமே புகழ்ந்துகொள்வார்கள். தர்மம் விட்டகன்ற, இகழப்பட்ட தொழிலால் மிக்க பொருளை அடைய ஆசையுண்டாயிற்று. இரவில் கூச்சலிட்டுப்பேசுவார்கள். அவர்களிடம் அக்னி குறைந்து ஜ்வலித்தது. புத்திரர்கள் தகப்பனை மீறினார்கள். பெண்கள் கணவனை மீறிச் சென்றனர். தாய், தந்தை, ஆசார்யன், முதியோர், அதிதி இவர்களைக் குருக்கள் என்று கொண்டாடவில்லை. சிறுவர்களைக் காப்பாற்றுவதில்லை. பிச்சையிடாமலும், பலி கொடாமலும் பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யாமலும் புஜித்தனர். அவர்களுடைய சமையற்காரர்களுக்கு மனம், மொழி, மெய் சுத்தியில்லை. சாப்பிடத்தக்க வஸ்து மூடப்படாமலிருந்தது. சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருக்க அவர்களுக்குக் கொடாமல் புஜித்தனர். அவர்களுக்கு ஒரு வேலைக்காரன், இரண்டு தாஸிகளிருந்தார்கள். சில அஸுரர்கள் மூன்று பசுவுள்ளவர்களாயிருந்தார்கள். சிலர் நான்கு ஆடு உடையவர்கள். சிலர் ஐந்து எறுமை, ஆறு குதிரை, சிலர் எழு குதிரைகள் உள்ளவராயிருந்தனர். இரவில் தயிரையும் ஸத்துமாவையும் உண்ண ஆரம்பித்தனர். ஈன்ற பத்து நாளுக்குள் பசுக்களுளின் பாலைக் கறக்க குடித்தார்கள். பசுக்களைக் கிரமமாகக் கறக்காமல் கன்றுக்குள்ள பாலையும் கறந்து குடித்தார்கள். துன்பமுற்று கதியற்ற மனைவிகளை எப்போதும் அடிக்கவும் திட்டவும் செய்வார்கள். பிராமணர்கள் சூத்திரான்னத்தால் போஷிக்கப்பட்டு வெட்கமின்றியிருந்தார்கள். குடும்பத்திலிருப்பவள் இ,ரைந்து கிடக்கும் தானியங்களைக் கவனிப்பதில்லை. பூனை, கோழி, நாய் இவைகளோடு விளையாடுவார்கள். அவர்கள் வீட்டில் முள்ளுள்ள மரங்களும், அவரைக்கொடிகளும் யாகத்துக்கு உபயோகப்படும் மரங்களும் இருந்தன. எப்பொழுதும் கிணற்றில் முழுகி வந்தார்கள். இரவில் எள்ளைப் புஜித்தனர்; இரவில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகிப் படுப்பார்கள். தான்றி, புன்கு இம்மரங்களின் நிழலில் படுப்பார்கள். அலரிப் பூவைச் சூடுவார்கள். தாமரை விரையைத் தின்பார்கள். புஷ்பத்தை மோந்து பார்ப்பார்கள். காலத்தில் உண்ணார்கள். விஷ்ணுவை த்வேஷிப்பவர்களாய் அவரின் பெருமையை நிந்திப்பார்கள். அவர்களில்லத்தில் முன் போல் ஹோமப்புகை காணவில்லை. வேதகோஷமில்லை. ஒவ்வொருவர் வீட்டிலும் யாகம் நடப்பதில்லை. சிஷ்யன், குரு என்ற முறையேயில்லை தேவர்களுக்குத் தலைவரும் பிராமணர்களுக்கு நன்மை செய்பவருமான ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் தள்ளிவிட்டு, பாஷண்டர்களை அடுத்தார்கள். ஹவ்ய கவ்யமில்லை. ஞானமில்லை. வேதாத்யயனமில்லை. தேவஸ்வத்தை (கோயில் சொத்தை) எடுக்க விரும்பினார்கள். பிராம்மணர்களின் ஸொத்தை விரும்பினார்கள். தேவாலயங்கள் மங்கள

வாத்யங்கள், வேதஸ்தோத்ரமில்லாதவையாயின; தானியங்கள் சிதறிக் கிடந்தன. அவைகளைக் காக்கைகளும் எலிகளும் புஜிக்கின்றன. பாலை மூடுவதில்லை. அசுத்தியுள்ளவர்கள் நெய்யைத் தொடுவார்கள். குந்தாலி, மண்வெட்டி, இறைந்த தானியம், வெண்கலப்பாத்திரம் மற்றும் உபயோகிக்கத் தகுந்த ஸாமான்கள் இவைகளைக் குடும்பத்திலிருப்பவர்கள் கவனிப்பதில்லை. பழுதாயிருக்கும் வீடுகளைப் புதுப்பிக்கிறதில்லை. அற்பரான ஸ்திரீகள் வைதிக ஸம்ஸ்காரமற்றவர்களாய். வயிறு வளர்ப்பவர்களாய், ஆசாரம் சுத்தியற்றவர்களாய் போகத்தால் வஞ்சிக்கப்பட்டு வெட்கம் கெட்டவர்களானார்கள். அங்குள்ள ஸ்திரீகள் பலகணியிலிருப்பார்கள். இரண்டு கைகளாலும் தலையைச் சொறிவார்கள். நற்குலத்தில் பிறந்த பெண்களும் மாமியும், மாமனாரும் நேரிலிருக்கவே கணவனை வெட்கமில்லாமல் பார்ப்பார்கள். பசுக்களைக்கட்டி வைத்துப் புல்லும் தண்ணியும் வைப்பதில்லை. சிறுவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே தின்பண்டத்தைத் தானே தின்பார்கள். அவர்கள் வேலையாட்களைத் திருப்தி செய்யாமல் புஜிப்பார்கள். பாயஸம், எள்ளான்னம், மாம்ஸம், அப்பம், முறுக்கு இவைகளைத் தமக்கு வேண்டியே செய்தார்கள். யாகத்தில் உபயோகப்படாத மாம்ஸத்தைத் தின்பார்களானார்கள். ஸந்தியா காலத்திலும் சூரியன் உதித்த பிறகும் தூங்கினார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் ஓயாத கலகமிருந்தது, தாம் கெட்டவர்களாய் நன்னடக்கையுள்ளார்களைப் பூஜிக்கிறார்களளில்லை. தாங்கள் தீயச் செயலுள்ளவர்களானார்கள். ஆசிரம தர்மங்களைச் சரிவரச் செய்யும் பெரியோர்களை த்வேஷித்தார்கள். ஸாங்கரியமுண்டாயிற்று. பரிசுத்தியில்லை வேதத்தை நன்குணர்ந்த பிராம்மணர்களுக்கும் வேதந்தெரியாத மூடனுக்கும் ஸம்மான்ங்களை சிறிதும் வித்தியாஸமில்லாமல் செய்ய முற்பட்டனர். ஸ்திரீகள் புருஷ வேஷம் போட்டும் புருஷர்கள் பெண்வேஷம் போட்டும் விளையாடிக் களித்தனர். முன்னோர்களான பிரபுக்களால் முன்பு பெரியோர்களுக்குக் கொடுத்த பாகங்களை ஸ்ரீமான்களாயினும் நாத்திகத்தன்மையால் நிறுத்தி விட்டனர். மித்திரர்கள் விரும்பிய பொருளைத் தாங்கள் அடைய விரும்பி அதைத் தொடர்ந்தனர். வால் மயிரின் நுனியளவுள்ல பொருளுக்காக அந்த ஸ்நேஹிதன் பொருளைக் கெடுத்தார்கள். பிறர்பொருளை அபஹரிக்க விரும்பினார்கள். பிராம்மணர்களாயிருந்தும் வர்த்தகம் செய்பவர்களானார்கள். சூத்திரர்கள் தவம் செய்தனர். சிலர் வேதமோதாமல் வ்ரதத்தைச் செய்தார்கள். வ்ரதமில்லாமல் வேதமோதினர். சிஷ்யன் குருவுக்குப் பணிவிடை செய்வதில்லை. குருவும் சிஷ்யனுக்குத் தோழன் போலாயினர். கிழவர்களாய் சிரமமடைந்த தாய் தந்தையர்கள் மக்களிடம் அன்னத்தைப் பிரார்த்திக்கின்றனர். வேதமறிந்த அறிஞர்கள் க்ருஷி செய்ய முயன்றனர். மூர்க்கர்கள் ச்ரார்த்தத்தில் புஜித்தனர். குரு சொன்னதைச் சிஷ்யர்கள் செய்யவில்லை. சிஷ்யன் சொன்னதைக் குரு செய்வார். மாமியார், மாமனார முன்னிலையில் நாட்டுப்பெண்கள் வேலையாட்களைக் கட்டளையிடுவார்கள். பர்த்தாவையும் கட்டாளையிடுவாள். அழைத்துப் பேசுவாள். பிதா புத்திரன் மனம் கோணாதபடி நடந்து வந்தான்; கஷ்டாப்பட்டு வளர்த்தும் வந்தான். நண்பர்கள் என்று எண்ணப்பட்டவர்கள் கூட தீப்பற்றியெரியும் பொருளையும், திருடர்கள் களவாடிய பொருளையும் கண்டு த்வேஷத்தால் பரிஹாஸம் செய்தனர். அனைவரும் நன்றிகெட்டவர்களும், நாத்திகர்களும், பாபிகளும் குருவின் மனைவியைத் தொடாருகிறவர்களுமாயினர். புத்திரர்கள் தாய் தந்தையர்களைத் தள்ளிவிட்டு 'எமது கர்மத்தால் உண்டானோம்" என்று சொல்லி மாமனாரை அனுஸரிப்பவர்களானார்கள் சாப்பிடக்கூடாததும் ஒன்றுமில்லை. வரை கடந்தவர்களானார்கள். ஆதலால சோபையிழந்தனர்.

காலம் வேறுபடவும் அந்த அஸுரர்கள் இவ்விதம் கெட்ட நடத்தையுடையவர்களாகவே, இனி நான் அங்கு இருஉக்கக்கூடாது என்று எனக்கு தோன்றிற்று. ஆதலால் வலிய வந்த என்னை ஓ இந்திரனே! ஸந்தோஷமாகக் கொண்டாதடு. உன்னால் பூஹிக்கப்படும் என்னைத் தேவர்களும் பூஜிப்பார்கள். நான் வஸிக்குமிடத்தில் என்னிடம் நேசமுள்ள ஆசை, ச்ரத்தை, திருதி, க்ஷாந்தி, விஜிதி, ஸந்நதி, க்ஷமை, ஜயை இந்த எட்டு தேவிகளும் வஸிப்பார்கள். இந்த எட்டுத் தேவிகளும் நானும் அஸுரர்களைத் தள்ளிவிட்டு, தர்மத்தில் உறுதியுள்ள மனமுடைய தேவர்களிடத்தில் வஸிப்போம் என்று உங்களிடம் வந்தோம் – என்று சொன்னாள்.

இவ்விதம் சொன்ன லக்ஷ்மிதேவியைப் பற்றி நாரதரும் இந்திரனும் மிகவும் பிரீதியுடன் ஸந்தோஷித்தார்கள். அப்போது அழகிய மணமும், ஸுகஸ்பர்சமும் கொண்ட வாயு ஆகாயத்தில் ஸுகமாக வீசினன் . லக்ஷ்மியுடனிருக்கும் இந்திரனைக்காணா விரும்பிய தேவர்கள் பரிசுத்தமன இடத்திலிருந்தார்கள். பிறகு லக்ஷ்மியுடனும் நாரதருடனும் கூடின தேவேந்திரன் ரதத்தின் மேலேறி ஸபைக்குச் சென்றான். பிறசு மஹர்ஷிகள் அங்கு வந்தனர். தேவலோகத்தில் அமுதம் பொழிந்தது. துந்துபி வாத்யங்கள் அடிக்கப்படாமலே முழங்கின. திசைகள் தெளிந்து விளங்கின. இந்திரனும் தர்ம வழியினின்றும் சலிக்கவில்லை. பூமியானது ரத்நமுண்டாகும்

பலவிடங்களை ஆபரணமாக கொண்டதாயிற்று.  மனிதர்களும் தேவர்களும் கின்னரர்களும் யக்ஷர்கள் முதலிய எல்லாரும் ஸம்பத்து நிறைந்தவர்களாயும் நல்ல மனமுள்ளவர்களாயுமானார்கள்.  காற்றால்  அலைக்கப்பட்ட மரத்திலிருந்து அகாலத்தில் பூவும் விழுவதில்லை.  பழம் விழுவது ஏது?  பசுக்கள் இஷ்டப்படி பாலைக்கொடுத்தன. ஒருவனிடமும் கடுஞ்சொல் உண்டாகவில்லை.  எல்லா இஷ்டங்களையும் அளிக்கத்தக்க, இந்திரன் முதலிய தேவர்களால் லக்ஷ்மிதேவிக்குச் செய்யப்பட்ட இந்தப்பூஜையைப் பிராம்மண ஸதஸ்ஸிலிருந்து கொண்டு  படிக்கிறவர்கள் இஷ்டபூர்த்தியுடன் லக்ஷ்மியை அடைகிறார்கள்.